பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 20 | வியாழக்கிழமை | 06.11.2025 | அதிர்வு 099

## ரயில் பாதையருகே ஆணின் சடலம் மீட்பு!

மாங்குளத்தில் ரயில் பாதைக்கு அருகே ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் – பனிக்கன்குளம் 07



# அநுர – சஜித் இடையே இரகசிய டீல் இல்லை!

## அரசுக்கு எதிரான நுகேகொடை பேரணியில் பங்கேற்காமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சமிந்த கருத்து



**“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் எவ்வித இரகசிய ஒப்பந்தமோ - இணக்கப்பாடோ இல்லை. கடந்த ஆட்சிக் காலங்களில்தான் எதிர்க்கட்சிகள் அரசுடன் இரகசியமாகக் கூட்டணியமைத்தன. ஐக்கிய மக்கள் சக்தியில் அவ்வாறு எவரும் செயற்படவில்லை. அரசுக்கு எதிரான நுகேகொடைப் பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி கலந்துகொள்ளாவிடினும் அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக நிச்சயம் குரல் கொடுக்கும்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.** 07

## தெதுரு ஓயாவில் மூழ்கி 5 இளைஞர்கள் மரணம்!

### நேற்று மாலை துயரம்

(க.மகாதேவன்)

சிலாபம் – தெதுரு ஓயாவில் மூழ்கி 5 இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். 07






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் ‘பெரும்பாலும்’ அமைதியாக நடைபெற்று முடிந்திருக்கின்றது.

வரும் வரவு – செலவுத் திட்ட விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ன முடிவு எடுப்பது என்பது பற்றி ஆராய்வதற்காகவே பிரதானமாக இக்கூட்டம் கூட்டப்பட்டதாக நேரத்துடன் அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு மணி நேரத்துக்கு மேல் இந்த விடயமே பேசப்பட்டது.

இவ்விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே முரணிலை இருந்தமையால் இந்த விடயம் மத்திய குழுவில் விரிவாக ஆராயப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழர்களின் தேசிய பிரச்சனை மற்றும் உடனடி சிக்கல்கள் தொடர்பில் கவனிக்காமல் இருக்கின்ற பின்புலத்தில் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பை அரசுக்கு உணர்த்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை சாணக்கியன் எம்.பி. வலியுறுத்தினார். 06



# சஜித் – ஜெய்சங்கர் நேற்று சந்திப்பு முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை நேற்று சந்தித்தார்.

புதுடில்லியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் கருத்துக் களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்திய – இலங்கை கூட்டாண்மை, பிராந்திய ஸ்திரத்தன்மை, தொடர்புகள் மற்றும் பரஸ்பர முன்னேற்றம் தொடர்பில் இரு தரப்பினரின் அர்ப்பணிப்புகள் குறித்தும் பல கருத்துக்களை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுமொரு முறை மீண்டெழுந்து நிற்பதற்குத் தேவையான பயன்பெறும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை இந்தியாவிடமிருந்து பெற்றுத் தந்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் நீண்டகால பொருளாதார மறுமலர்ச்சியைத் திட்டமிடுவதற்காக இன்றைய காலத்தைப் பயன்படுத்துவது குறித்து பல கருத்துக்களை கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதன் போது முன்வைத்தார்.

இலங்கைப் பொருளாதாரத்தில் கண்டு வரும் முன்னேற்றங்கள், தொடர்ச்சியாக நடந்து வரும் சீர்திருத்தங்கள் மற்றும்கடன்நிலைத்தன்மையைப்பேணுவதற்கான திட்ட வரைபடம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித்தார்.

இதன்பிரகாரம், 2028 முதல் கடன் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்கும் போது, ஐ.எம்.எவ். வேலைத்திட்டத்துக்குப் பிந்தைய காலகட்டத்தில் எதிர்பார்க்கப்படும் சவால்களையும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோடிட்டுக் காட்டினார். இதன் பொருட்டான பிராந்திய முதலீடு மற்றும் ஒத்துழைப்பால் ஆதரிக்கப்படும் ஒரு நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயத்தின் அவசியப்பாடு தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.



வர்த்தகம், எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இங்கு பல யோசனைகளை இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டன.

மேலும், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் கொள்ளவுத் திறனை விரிவுபடுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதோடு, வலயமைப்பு தொடர்புகளை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார்.

பூட்டான் மற்றும் நேபாளத்துடனான இந்தியாவின் வெற்றிகரமான கூட்டாண்மையைப் பயன்படுத்திக் கொண்டு, மின்சாரம் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பில் ஆராயும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்திய வெளியுறவு அமைச்சு வசதிகளைச் செய்து தரும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது உறுதியளித்தார்.

சமுத்திர, விமான இணைப்புச் சேவைகள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள இரு நாடுகளிடையேயான மின்சார இணைப்புக் கட்டமைப்பின் இடைத் தொடர்புகள் உள்ளிட்ட முக்கிய ஒத்துழைப்பு முயற்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு மதிப்பாய்வு செய்தனர்.

பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையையும், கடல்சார் போக்குவரத்தின் சுதந்திரத்தையும் பேணிச் செல்வதற்கு இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தை உணர்ந்து, பிராந்திய பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கண்டு வரும் இந்தியப் பெருங்கடல் சார் பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கத்தில் இலங்கையின் வகிபாகம் குறித்தும் இவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மூலோபாய சமநிலை மற்றும் சுயாதீனத்தைப் பேணிக் கொண்டு, அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படையாக தொடர்புகளைப் பேணி, நடைமுறைக்கு ஏற்ற அணிசேரா கொள்கைக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் உறுதிப்படுத்தினார். இங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இந்த அணுகுமுறையை ஏற்றுக் கொண்டு, இலங்கையின் ஸ்திரத்தன்மை இந்தியாவின் சொந்த பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கு அவசியமாக அமைந்து காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

# 'கோட்டா கோ கம' போராட்டம் மீதான தாக்குதல்: முன்னாள் எம்.பிக்கள் உட்பட 31 பேர் அடையாளம்




கொழும்பு, காலிமுகத்திடலில் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட "கோட்டா கோ கம" போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் 31 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான குற்றப்பத்திரிகைகள் விரைவாகத் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர்களில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அடங்குகின்றனர் என்றும், மேலும் அப்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்ய எதிர்பார்ப்பதாகவும் சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

### 'பேஸ்புக்' களியாட்ட நிகழ்வில்

# ஐஸ் போதைப்பொருளுடன் 10 பேர் வசமாகச் சிக்கினர்!



களுத்துறை, பாணந்துறை பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் "பேஸ்புக்" ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வொன்றில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களில் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் அவரது மனைவி ஆகியோரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் நால்வர் திருட்டு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஏனையவர்களிடமிருந்து தலா 20 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை, கேகாலை, பதுளை மற்றும் தெஹிவளை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அம்பாறையில் தகாத உறவால் இராணுவச் சிப்பாய் கொலை!

அம்பாறை, மகாஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொரபொல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இராணுவச் சிப்பாய் ஒருவர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரியா இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ மகாஓயா , சமகிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இராணுவச் சிப்பாயே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி இராணுவச் சிப்பாய், மின்னேரியா பீரங்கிப் படைப் பிரிவில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாயின் மனைவியுடன் நீண்ட காலமாக தகாத உறவில் இருந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவும் மேற்படி இராணுவச் சிப்பாய், சக இராணுவச் சிப்பாயின் மனைவியுடன் வீட்டில் ஒன்றாக இருந்துள்ளார்.

இதன்போது வீட்டுக்குச் சென்ற கணவரான இராணுவச் சிப்பாய், தனது மனைவியுடன் ஒன்றாக இருந்த இராணுவச் சிப்பாயைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.



இதனையடுத்து 34 வயதுடைய கொலையாளியான இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்திய சபாநாயகரை சந்தித்துப் பேசிய சஜித்

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

நிறுவன தொழில்முறையை மேம்படுத்துதல், சட்டவாக்கத்துறையோடு தொடர்பான ஆராய்ச்சிகளை வலுப்படுத்துதல் மற்றும் நாடாளுமன்றத்தில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவித்தல் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர்.

கட்டமைப்பு சார் பரிமாற்றங்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் திறன் மேம்பாடு போன்ற முன்முயற்சிகள் மூலம் இலங்கை நாடாளுமன்றத்துக்கும், இந்திய மக்களவைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த இருவரும் இணக்கம் தெரிவித்தனர்.

ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் நாடாளுமன்ற ஒருமைப்பாட்டினது மதிப்புகளுக்காக இரு நாடுகளிலும் பகிர்ந்துகொள்ளப்பட்ட அர்ப்பணிப்புகளை இந்தச் சந்திப்பு சுட்டிக்காட்டியது.

















# பருத்தித்துறையில் 9 உணவகங்களுக்கு எதிராக நகர சபையால் தண்டப்பணம் அறவிடப்பட்டது

உணவகங்களில் உள்ளக பயன்பாட்டின் போது லஞ்சீ சீற் பாவனை மற்றும் திண்மக் கழிவுகளை தரம்பிரிக்காமைக்காக பருத்தித்துறையில் உள்ள 9 உணவகங்கள், வெதுப்பகங்களிற்கு பருத்தித்துறை நகர சபையினால் 35 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து பருத்தித்துறை நகரில் உள்ள உணவகங்களில் அண்மையில் திடீர் சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மூன்று உணவகங்களில் உள்ளக பாவனையின் போது லஞ்சீ சீற் பயன்படுத்தியமை உறுதி செய்யப்பட்டது.

மேற்படி உணவக உரிமையாளர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் தண்டப்பண தொகையினை செலுத்தியுள்ள நிலையில் இரு உணவக உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 6 உணவகங்கள், வெதுப்பங்களில் திண்மக்கழிவுகளை தரம்பிரிக்காது பேணியமை, நகர பிதாவின் பிரசன்னத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது உறுதி செய்யப்பட்டதை அடுத்து மேற்படி கடைகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா என 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் எத்தனை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன?

## பாட்டலி சம்பிக்க ரணவக்க கேள்வி



"சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கமைய 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டளவில் சொத்து வரி அமுல்படுத்தப்படுமா, இல்லையா என்பதையும், 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதையும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2025 ஆம் ஆண்டு அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுவதை தர்க்க ரீதியில் ஆராய வேண்டும். சகல துறைகளிலும் வரிகளை அதிகரித்து விட்டு அதன் ஊடாகவே அரச வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் சுகாதாரம் மற்றும் கல்வி, பாடசாலை உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வெற் வரியை முழுமையாக இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது.ஆனால் இந்த விடயம் மறக்கப்பட்டுள்ளது.

2027 மற்றும் 2028 ஆண்டுகளில் சொத்து வரியை அமுல்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்து செயற்திட்டங்களை பரிந்துரைத்துள்ளது. சொத்து வரிக்கு அமைவாகவே இலங்கையின் பொருளாதார சுட்டெண்ணை சர்வதேச நாணய நிதியம் தயாரித்துள்ளது.

2027 மற்றும் 2028 ஆம் ஆண்டளவில் சொத்து வரி அமுல்படுத்தப்படுமா என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின் போது நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும். வரி மற்றும் நிதி விவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத்தப்பட்ட என்பதையும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும். வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை ஸ்தாபிப்பது குறித்தும் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் ." என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகாவலி அபிவிருத்தி, வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவை தமிழருக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் அந்த அமைச்சுகள் மீதான விடயங்களையாவது எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று ரவிகரன் எம்.பி. குறிப்பிட்டார்.

மற்றைய எம்.பிக்கள் பெரும்பாலும் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிக்காமல் விட்டாலும் எதிர்த்து வாக்களிக்க தேவையில்லை என்று சாரப்பட தங்கள் கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்திலும், நல்லாட்சி அரசின் காலத்திலும் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்த முன் அனுபவம் உண்டு என்பதை சிறிதரன் எம்.பி. சுட்டிக் காட்டினார்.

ஆனால், அந்த நிலைமை தொடர்பில் உண்மை விடயங்களை சுமந்திரன் விவரித்தார்.

2010 –2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு மஹிந்த ராஜபக்ஷவின் ஆளுங் கட்சி நேரடியாகத் தீர்வுக்கான பேச்சில் ஈடுபட்டிருந்தது.

அதேபோல நல்லாட்சி அரசின் காலத்திலும் தீர்வு முயற்சிகளை அரசுடன் சேர்ந்து தமிழ்க் கூட்டமைப்பு முன்னெடுத்து வந்தது.

இத்தகைய நேரடி சமரச முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நடவடிக்கையாக வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறோம்தான்.

ஆனால் இப்போது தமிழ் அரசு கட்சியை முழுமையாகப் புறக்கணித்து அரசு நடக்கின்றது. தீர்வுக்கான எந்த முயற்சியும் முன்னெடுக்கப்படவில்லை. நேரடிப் பேச்சுக்கு நாம் வைத்த கோரிக்கையை ஜனாதிபதி புறம் தள்ளி, உதாசீனப்படுத்தி நடக்கின்றார். மாகாண சபை தேர்தல்களைத் திட்டமிட்டு நடத்தாமல் தள்ளிப் போடுகிறார்கள். அளித்த வாக்குறுதி படி 13ஆம் திருத்த நடைமுறையாக்கத்தை முழுமையாகச் செய்ய வேண்டும். அதையும் தூக்கிக் கடாசி விட்டு அரசு நடக்கின்றது. இந்த சமயத்தில் அரசை ஆதரித்தோ, எதிர்க்காமல் நடுநிலை வகித்தோ, அரசை சமாளிக்க நாங்கள் முற்படக்கூடாது. எங்கள் எதிர்ப்பை முழுமையாகக் காட்ட வேண்டும் என்றார் சுமந்திரன்.

1965 இலுலும் தமிழரசுக் கட்சி அரசோடு சேர்ந்து செயல்பட்ட காலத்தில் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து இருக்கின்றது. ஆனால் அதற்காக இந்தச் சமயத்திலும் அந்த வேலையை செய்ய முடியாது என்று துரைராஜசிங்கம் விளக்கினார்.

மத்திய குழுவில் பெரும்பான்மையோரின் நிலைப்பாடு வரவு – செலவுத் திட்டத்தில் அரசுக்கு எங்கள் எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்ட வேண்டும் என்பதாக இருந்தது. எனினும், ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, மற்றவர்கள் அரசை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை, ஒன்றில் ஆதரித்து அல்லது வாக்களிப்பில் பங்கு பெறாமல் நடுநிலை வகித்து மென்போக்கைக் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

எது, எப்படி என்றாலும் வரவு – செலவுத் திட்டம் மீதான முதல் வாக்கெடுப்புக்கு முதல் நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களும் இணைய வழியில் ஒன்று கூடி ஒரு முடிவை எடுப்பார்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வெளிநாட்டுக்குச் செல்லும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் அங்கு அரசியல் ரீதியான நிகழ்வுகளில் பங்குபற்றுவதாயின் அதற்கு முன்னர் கட்சியின் தலைவர், செயலாளர், கட்சியின் வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோருக்கு முற்கூட்டியே தகவல் அளிக்க வேண்டும் என்று முன்னைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் நேற்றைய கூட்டத்தில் பழைய அறிக்கை உறுதிப்படுத்தல் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இழப்பீட்டு அலுவலகத்துக்கு படைத்தரப்பு பின்னணி கொண்ட இருவரை அலுவலர்களாக நியமிப்பதற்கு அரசமைப்புக் கவுன்ஸில் எடுத்த முடிவு குறித்து காரசாரமாக சிறிதரனும் சாணக்கியனும் மோதிக்கொண்டனர்.

இது சம்பந்தமாக அரசமைப்புக் கவுன்ஸிலின் மூன்று கூட்டத்தில் இரண்டு கூட்டத்திற்கு மட்டுமேதான் சமுகம் தந்திருந்தார் என்றும், இப்பதவிக்கு நான்கு பேர் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு வந்து அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் என்றும், அவர்களில் பாதுகாப்புத் தரப்பினர் இருவரைப் பரிந்துரைப்பதற்கு தாம் அரசமைப்புக் கவுன்ஸிலில் எதிர்ப்புத் தெரிவித்தார் என்றும் சிறிதரன் மத்திய குழு கூட்டத்தில் கூறினார். அத்தகவல்கள் முற்றிலும் தவறு என்று சாணக்கியன் விடாப்பிடியாக மறுத்து நின்றார்.

மூன்று கூட்டத்திற்கும் தவறாது சிறிதரன் சென்றிருந்தார் என்றும், அந்தக் கூட்டங்கள் பற்றிய அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட கூட்டத்திலும் சிறிதரன் பங்குபற்றினார் என்றும், பன்னிரண்டு பேருக்கு நடத்தப்பட்ட தேர்வில் இருந்துதான் நான்கு பேர் சிறிதரன் உட்பட்ட தேர்வு குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றும் சாணக்கியன் அடித்துக் கூறினார்.

சாணக்கியனின் குற்றச்சாட்டு தவறு எனின் அது குறித்து அரசமைப்பு கவுன்ஸிக் கூட்ட அறிக்கை மூலம் சிறிதரன் நிரூபிக்கலாம் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த வாய்ப்பு சிறிதனுக்கு வழங்கப்படுவதாகவும் கூட்டத்தில் கூறப்பட்டது.

எது, எப்படி என்றாலும், இழப்பீட்டு அலுவலர் பதவிக்கு பாதுகாப்புத் தரப்பின் பின்னணி கொண்ட இருவரை அரசமைப்பு கவுன்ஸில் பரிந்துரைத்திருந்தாலும், அவர்களை நியமிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியை ஏகமனதாக கோருவது என சிறிதரன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் மத்திய குழு நேற்றுத் தீர்மானித்தது.

அதாவது சிறிதரனும் அங்கத்துவம் வகிக்கும் அரசமைப்புக் கவுன்ஸில் மூலம் பரிந்துரைப்பப்பட்ட நால்வரில் படைத்தரப்பு பின்னனி கொண்ட இருவரையும் நியமிக்க வேண்டாம் என்று சிறிதரனின் தமிழரசுக் கட்சி அதன் மத்திய குழுத் தீர்மானம் மூலம் ஜனாதிபதியை கோரும் முடிவை எடுத்திருக்கின்றது.

அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் சிறிதரனின் நடத்தை தொடர்பாக பல தளங்களிலும் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை உரிய ஆதாரங்கள், அரசமைப்பு கவுன்ஸில் கூட்ட அறிக்கை போன்றவை மூலம் மறுக்கவோ முறியடிக்கவோ வேண்டிய கடப்பாடு சிறிதரனுக்கு உள்ளது. இந்த விடயத்தில் பந்து இப்போது சிறிதரனின் களத்தில் விழுந்துள்ளது.

மத்திய குழுக் கூட்டத்தில் இன்னும் பல சுவாரஸியமான விடயங்கள் கட்டவிழ்ந்தன. அடுத்து வரும் நாள்களில் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை விவரிப்பேன். அதுவரை பொறுத்தருள்க.

* * *

நேற்றைய பத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான உள்கட்சிப் பிணக்குப் பற்றிய வழக்கு குறித்த விவரங்களை தெரிவித்திருந்தேன்.

இன்று தமிழரசுக் கட்சி சார்பாக தாக்கல் செய்யப்பட்ட இன்னொரு வழக்குக் குறித்து தகவல் தருகிறேன்.

சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பதவி நீக்கி, அந்த இடங்களுக்குத் தங்களை நியமிக்குமாறு கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் வரும் பத்தாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் இந்தத் தேர்தல் ஆட்சேபனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சபைகளுக்கும் சைக்கிள் கட்சி சார்பில் போட்டியிட நியமிக்கப்பட்ட தலா ஒவ்வொரு பெண் வேட்பாளர்கள் தேர்தல்களில் அந்தந்தப் பிரதேச சபைகளில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்ற தீர்ப்பை – முடிவை – உயர்நீதிமன்றம் வழங்கி இருப்பதால், அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவுக்குரிய அடிப்படைத் தகுதியை அந்த மனுக்கள் இழந்து, தகைமையிழந்து விட்டன என்ற காரணத்தினால் அந்த வேட்பு மனுக்களின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பதவி இழந்தவர்களாக அறிவிக்குமாறும், அந்தத் தேர்தல் முடிவுகளில் அடுத்த இடத்தில் இருக்கும் தங்களை அப்பதவிகளுக்கு நியமிக்குமாறும் கோரி தமிழரசு சார்ந்த உறுப்பினர்களினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது உள்ளூராட்சித் தேர்தல் சட்டமாகும்.

ஏற்கனவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் பூர்த்தியாகி உள்ள நிலையில், அடுத்த வாரத்தில் – 10 ஆம் திகதிக்கு – விசாரணைக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புது வருடம் பிறப்பதற்குள் இந்த வழக்குகளில் ஒரு முடிவு வந்துவிடும் என்று தோன்றுகிறது.

வழக்காளிகளுக்கு சார்பாக தீர்ப்பு வந்தால் சாவகச்சேரி நகரசபை புத்தாண்டில் புதிய நிர்வாகத்தின் கைக்கு மாறிவிடவும் வாய்ப்பு உண்டு.

* * *

முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், முறைகேடுகள், மோசமான அரச நிர்வாகம் போன்றவை தொடர்பில் அதிரடி நடவடிக்கைகளை எடுப்போம் என்று தொடர்ந்து கங்கணம் கட்டி வலியுறுத்தி வரும் தேசிய மக்கள் சக்தி அரசு, இது விடயத்தில் முன்னாள் அரசுத் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சம்பந்தமாக காத்திரமாக எதுவும் செய்ததாகத் தெரியவில்லை என்பதையும், அதனால் அந்த ஆட்சிக் காலங்களில் இருந்த சிரேஷ்ட அதிகாரிகள் மீது இன்றைய ஆட்சியாளர்களின் பார்வை திரும்பி இருக்கின்றது என்பதையும் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தேன்.

07

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அப்படி உயர் அதிகாரிகளுக்கு எதிரான நடவடிக்கை பற்றிய ஒரு பட்டியல் இப்போது வெளியாகியுள்ளது.

பொது வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான விசாரணையை தற்போது லஞ்ச ஒழிப்பு ஆணையம் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், தற்போது உயர் அதிகாரிகளாகப் பணியாற்றியோர், பணியாற்றுவோர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இலங்கை ரயில்வேயின் முன்னாள் பொது முகாமையாளர், இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் ஆகியோர் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் லஞ்ச ஒழிப்பு அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் கைது செய்யப்பட்டனர்.

பதவி நீக்கத்துக்குப் பரிந்துரைக்கப்பட்ட ரயில்வே சாரதி ஒருவருக்கு தம் மிஷ்டப்படி மீள் நியமனம் வழங்கிய மைக்காக ரயில்வேயின் முன்னாள் பொது முகாமையாளர் கைதானார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான 'சிறிகொத்தா'வை முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் புதுப்பிக்க கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் சொத்துக்களையும் பயன்படுத்தியதன் மூலம் – கட்சிக்கு தேவையற்ற நன்மையை ஏற்படுத்தியதன் மூலம் – அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 1.67 மில்லியன் ரூபா நிதி இழப்பை ஏற்படுத்தினார் எனக் கூறி அதன் முன்னாள் நிர்வாக இயக்குநர் கைது செய்யப்பட்டார்.

இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகமும், நீதி அமைச்சின் தற்போதைய கூடுதல் செயலாளருமான செபாலிகா சமன்குமாரி, ஊழல் மற்றும் குற்றவியல் நிதி முறைகேடு குற்றச்சாட்டின் பேரில் அக்டோபர் 8 ஆம் திகதி லஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் கைது செய்யப்பட்டார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுக்கு இழப்பீட்டுத் தொகையைத் தவறாகப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைதானார்.

செப்டம்பரில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சம்பத் சுமேத பூஜித ரத்நாயக்க மற்றும் முன்னாள் பணிப்பாளர் (காணி) மற்றும் உள்ளக மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் (ஓய்வுபெற்ற) கொஸ்வத்தலியனகே வீரவன்ஷ பெரேரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும், 2015 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவரது சிரேஷ்ட ஆலோசகராக இருந்தவருமான சரித ரத்வத்தையும் சில தினங்களுக்கு முன்னர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான ஹுசைன் அகமது பைலா, 2015 ஆம் ஆண்டில் அரசுக்கு 9 கோடி 96 இலட்சத்து 79 ஆயிரத்து 799 ரூபா இழப்பை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் அண்மையில் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவி வகித்த காலத்தில் எந்தத் தேவையும் இல்லாமல் 50 தற்காலிக சேமிப்புக் களஞ்சியக் கட்டமைப்புகளை இறக்குமதி செய்தார் எனவும், இதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது எனவும், வெளித் தரப்பினருக்கு அந்தத் தொகைக்கு சமமான இலாபம் ஏற்பட்டது எனவும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உயரதிகாரிகள் கைதுப் பட்டியல் நீளும் என்றே தெரிகின்றது.

*   *   *

கொழும்பு மற்றும் அருகிலுள்ள நகரங்களில் போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது குறித்து குழந்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சகம் கடுமையான கவலையை எழுப்பியிருக்கின்றது.

சமீபத்திய தகவல்கள் கவலையளிக்கும் போக்கைக் காட்டுகின்றன என்றும், அதிகமான சிறுமிகளும் இளம் பெண்களும் பல்வேறு போதைப்பொருள்களுக்கு ஆபத்தான விகிதத்தில் அடிமையாகி வருகின்றனர் எனவும் அமைச்சர் சரோஜா சாவித்திரி பால்ராஜ் கூறியுளார்.

பொலிஸ், போதைப்பொருள் தடுப்புப் பிரிவுகள் மற்றும் தேசிய ஆபத்தான மருந்துக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகளின்படி, பெண்கள் மத்தியில் ஐஸ் (மெத்தாம்பேட்டமைன்), மாத்திரைகள், மதுபானம் மற்றும் சிகரெட் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

கர்ப்பிணிப் பெண்களிடையே போதைப் பொருள் அடிமையாதல் அவர்களின் குழந்தைகளின் அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்றும் அமைச்சர் எச்சரித்தார். வளர்ந்து வரும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவும், தேவையான ஆதரவு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை வழங்கவும் அமைச்சு ஏற்கனவே ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கத் தொடங்கியுள்ளது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் மகளிர் இந்தப் பிரச்சினைக்குள் சிக்கி வருகின்றனர் என்பது பற்றிய தகவல்கள் ஆங்காங்கே வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. விரைந்து சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டிய பேராபத்தாக இது மாறி வருகின்றது. ஆனால் சமூக மட்டத்தில் இந்தப் பேராபத்துக் குறித்து முன்னெச்சரிக்கை உணர்வு வெளிப்பட்டதாகத் தெரியவில்லலை.

## அநுர - சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பல எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தயாராகியுள்ளன.

எவ்வாறிருப்பினும் அந்த எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை எனப் பிரதான எதிர்க்கட்சியாக நாம் கொள்கை ரீதியில் தீர்மானித்திருக்கின்றோம். எனினும், எதிர்க்கட்சிகளை முடக்கும், அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக நாம் நிச்சயம் குரல் கொடுப்போம்.

அந்தப் போராட்டத்தில் பங்கேற்றாவிட்டாலும், அதற்கான ஆதரவை வழங்குவோம். அரசுக்கு எதிராக நுகேகொடையில் மாத்திரமின்றி, நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சித் தலைமைத்துவத்தின் தீர்மானங்களை ஏற்று அதற்கமையவே செயற்படுவோம் என்ற உறுதி மொழிக்கமையவே நாம் செயற்படுவோம். நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்புப் பேரணியால் அரசு சற்று அச்சமடைந்துள்ளது எனத் தெரிகின்றது.

அரசு கூறிய அனைத்து பொய்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களும் அவற்றை உணர ஆரம்பித்துள்ளனர். ஓராண்டு என்ற குறுகிய காலத்துக்குள் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆணையை அரசு இழந்துள்ளது.

அந்தவகையில் இந்த அரசின் இயலாமையை மக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பொறுத்தமான நேரத்தில் நடவடிக்கை எடுக்கும். எதிர்வரும் 21ஆம் திகதி எதிர்ப்புப் பேரணி வெற்றியை முழு நாடும் அறிந்து கொள்ளும்.

இந்த அரசுடன் எமக்கு எவ்வித இரகசிய ஒப்பந்தமோ – இணக்கப்பாடோ இல்லை. எதிர்க்கட்சிகள் அரசுடன் திரை மறைவில் இரகசிய கூட்டு அமைத்துள்ளதாயின், நாம் அமைதியாகவே இருப்போம். மாறாக அரசுக்கு எதிராகப் பேசிக் கொண்டிருக்க மாட்டோம். கடந்த ஆட்சி காலங்களில்தான் எதிர்க்கட்சிகள் அரசுடன் இரகசியமாகக் கூட்டணியமைத்தன.

ஐக்கிய மக்கள் சக்தியில் அவ்வாறு எவரேனும் செயற்பட்டால், உரிய நேரத்தில் மக்கள் அதற்குத் தக்க பதிலை வழங்குவர். ஆனால் அவ்வாறு எவரும் செயற்பட மாட்டார்கள் என்று நம்புகின்றேன்." – என்றார்.

## தெதுரு ஓயாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தத் துயரச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கிரிபத்கொடையில் இருந்து சுற்றுலா சென்ற இளைஞர்களே இந்த அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அவர்கள் தெதுருஓயாவில் நீராடிய போது ஐவர் காணாமல்போயிருந்தனர்.

அவர்களில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காணாமல்போயிருந்த ஏனைய நால்வரையும் தேடும் பணி மும்முரமாக நடைபெற்றது.

அதன்போது மேற்படி நால்வரும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

அதேவேளை, உயிருடன் ஏலவே மீட்கப்பட்டவரும் பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

## ரயில் பாதையருகே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பகுதியில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை.

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் இரவு பயணித்த ரயிலிலிருந்து தவறி விழுந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முள்ளை முள்ளால் எடுத்தல்

'முள்ளை முள்ளால் எடுப்பது' என்பார்கள்.

பல சமயங்களிலும் இலங்கையில் ஆளும் தரப்பினர் தாம் சட்ட விரோத நடவடிக்கை என வரிசைப்படுத்திய விடயங்களை அடக்குவதற்கு இத்தகைய தந்திரோபாயங்களை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள் என்பது அப்பட்டமான உண்மை.

சட்ட ரீதியான செயல்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் நியாயத்தை நிலை நிறுத்த வக்கற்ற ஆட்சியாளர்கள், பல சமயங்களிலும் தங்களின் தவறான பாதைகளை - மார்க்கங்களை - நிலைநிறுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் இத்தகைய தர்க்கங்களை முன்வைப்பது வழமை.

ஈழத் தமிழர்களின் உரிமை மீட்புக்கான போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய பின்னர், அதனை அடக்க முடியாமல் தடுமாறிய கொழும்பு, இந்தப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என்று பிரகடனப்படுத்தியது. பின்னர் 'பயங்கரவாதத்தை அரச பயங்கரவாதத்தால் அடக்குவது' என்ற வெளிப்படுத்தப்படாத-பிரகடனப்படுத்தப்படாத - 'நியாயப்படுத்தல்' மார்க்கம் ஒன்றை அது கையாண்டது.

தமிழர் தேசம் மீது தான் கட்டவிழ்த்து விட்ட மிக மோசமான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், உரிமை மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு இத்தகைய நியாயத்தை முலாம் பூசுவதன் மூலம், தனது மக்களின் முன்னால் தனது பேரினவாத சிறுமைத்தனத்தை அது நியாயப்படுத்த முயற்சித்தது. இந்த விடயம் வெளிப்படையான உண்மை.

போதைப்பொருள் மாபியாவும், திட்டமிட்ட குற்றச் செயல்களைப் புரிந்து வருகின்ற பாதாள உலகக் குழுவினர்களின் நடவடிக்கைகளும் கட்டுக்கடங்காமல் எல்லை மீறியபோது இதேபோன்று முள்ளை முள்ளால் எடுக்கும் கைங்கரியம் தென்னிலங்கை ஆட்சி பீடத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்டமையை கடந்த ஆட்சிக் காலத்தில் பார்த்தோம்.

குறுக்கு வழியால் பதவிக்கு வந்த அப்போதைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் போதைப்பொருள் மாபியாக்களையும் பாதாள உலகம் குழுவினரையும் அடக்கும் நடவடிக்கை இத்தகைய ஒரு பாணியில்தான் அச்சமயத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அப்போது அவர் தலைமையில் 'யுக்திய' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட இந்த 'ஒப்பரேஷன்' பற்றியும், அதன் ஒரு கட்டத்தில் வெலிகமவில் 2023 டிசெம்பர் 31 இல் இடம்பெற்ற ஒரு நடவடிக்கையில் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரே சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்தும் இப்போதும் செய்திகள் வெளியாகி வருகின்றன. விசாரணைகள் மும்முரமாக நடக்கின்றன.

நல்லது. இப்போதைய அரசாங்கமும் பாதாள உலகம் குழுக்கள் மற்றும் போதை பொருள் மாபியாவுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை என்ற திட்டத்தை அறிவித்து முன்னெடுக்கத் தொடங்கியிருக்கின்றது. அதுவும் இவ்வாறு 'முள்ளை முள்ளல் எடுக்கும் நடவடிக்கை' என்ற (அ)நியாயப்படுத்தலுடன் சட்ட விரோத - ஜனநாயக விரோத - அரசகாவல்துறையின் மாபியா நடவடிக்கையாக மாறாமல் இருக்க வேண்டும்.




# சட்டவிரோத கடல் தொழிலை உடனடியாக தடுக்க வேண்டும்

## நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு

வடக்கு கடற்பகுதியில் சட்டவிரோத தொழில்களை உடனடியாக தடுத்து நிறுத்துவதன் ஊடாகவே எமது கடல் வளத்தையும் மீனவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களை சேர்ந்த உள்ளூர் மீனவர்களுக்கு தொழில் அனுமதிகளை வழங்குவதன் மூலமே எமது கடல் வளங்களும் கரையோர பகுதி நிலங்களையும் பாதுகாக்க முடியும்.

வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு தயவு செய்து அனுமதி குடுக்க வேண்டாம். தொழில் அனுமதி என்ற போர்வையில் எமது நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கு. இவ்வாறான செயற்பாட்டிற்கு முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு பொறுப்பான நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர்கள் உடந்தையாக செயற்பட வேண்டாம் என தயவாக கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட நீரியல் வளத்துறையின் புதிய உதவி பணிப்பாளர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கு. இதுவரை லஞ்சத்தை பெற்றுக்கொண்டு வடக்கு மீனவர்களையும் கடல் வளத்தையும் அழிவு நிலைக்கு இட்டுச் சென்றனர்.

இனிமேல் அவ்வாறான செயற்பாட்டினை கைவிட்டு

சட்டவிரோத கடற்றொழில்களை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து எமது கடல் வளங்களை பாதுகாக்கவும் மீனவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டு. சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவித்து கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருவதால் எமது நிலை கேள்விக்குறியாக மாறியுள்ளது. எங்களது எதிர்கால சந்ததிக்கு கடல் வளத்தை பாதுகாக்க புதிய மாவட்ட உதவிப் பணிப்பாளர் மனசாட்சிப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய இழுவைப்படகுகளின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டதாக தற்போதைய அரசாங்கத்தை சேர்ந்தவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கூறிவந்த நிலையில் தற்போது பருத்தித்துறை கடலில் வைத்து 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவு, மன்னார் உள்ளிட்ட வடக்கு கடற்பரப்பில் இந்திய எல்லைதாண்டிய மீன்பிடி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இந்த விடயம் இரு நாட்டிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால் இதற்கு ஒரு தீர்வை எட்டமுடியாத நிலை காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேர்தல் வர இருக்கும் நிலையில் அங்குள்ள அரசியல் செல்வாக்கு மிக்கவர்களின் தூண்டுதலில் தான் திட்டமிட்டு எல்லை தாண்டி வருகின்றனர். இதன் மூலம் படகுகளும் மீனவர்களும் கைது செய்யப்படும் நிலையை வேண்டுமென்றே ஏற்படுத்துகின்றனர். இக்கைதுகளை வைத்து அங்கு அரசியல் செய்கின்றனர். கச்சதீவு மீட்பு கோசத்தை மீண்டும் கையிலெடுத்து அரசியலாக்கி வருகின்றனர்.

வடக்கு கடலில் வைத்து கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுதலை செய்யாது தொடர்ந்தும் சிறையில் அடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லை தாண்டினால் நிரந்தர சிறை என்ற நிலை ஏற்பட்டால் ஒருவரும் எங்கட கடல்பக்கம் வரமாட்டார்கள்.” என்றார்.




# போதைப்பொருள், ஊழலை ஒழிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு

எமது தேசத்தின் இரண்டு கொடிய சக்திகளான போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பயிற்சி காலத்தை முடித்துக்கொண்டு வெளியேறிச்செல்லும் சிறைச்சாலை அதிகாரிகளின் நிகழ்வு நேற்று புதன்கிழமை அகுனகொலபெலஸ்ஸ சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“எமது அரசாங்கத்தின் கீழ் நீதி குறிப்பிட்ட ஒரு சிலரின் வரப்பிரசாதம் அல்லாமல் அனைவரதும் உரிமையாகும் என்ற ஆட்சி முறைக்கு பிரவேசித்துக்கொண்டிருக்கிறோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது மக்களின் அதிகாரங்களை மக்களுக்கே திருப்பி கொடுக்கும் அரசாங்கமாகும். மக்களிடமிருந்து எதனையும் பறித்துக் கொள்ளும் அரசாங்கம் அல்ல. அரச நிறுவனங்கள் மற்றும் சட்டம் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புதல், மோசடிகளை இல்லாதொழித்தல் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து விடங்களும் உண்மைத்தன்மை, சாதாரணதன்மை மற்றும் மக்கள் எற்புடையதாக பிரதிபலிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

நீதியை நிலைநாட்டும் முறைமை ஒன்றை கட்டியெழுப்பும் பொறுப்பு நீதி அமைச்சுக்கு முன்னால் இருக்கிறது. சட்டத்தை நிலைநாட்டும்போது அது தண்டனை பெற்றுக்கொடுப்பதாக கருதாமல் புதிய ஆரம்பம் ஒன்றை பெற்றுக்கொடுக்கும் வழியாக வேண்டும்.

எமது சிறைச்சாலை கட்டமைப்பை மறுசீரமைப்பது இந்த அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாக கருதி செயற்படுவோம். சிறைச்சாலைகள் தண்டனை பெற்றுக்கொடுக்கும் இடம் அல்ல, மாறாக அது வாழ்க்கைக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை வழங்கும் மாற்றத்தின் பாடசாலையாக மாற்றபட வேண்டும். சிறைப்படுத்தப்படும் சிறைக் கைதிகளின் அதிகமானவர்கள் துரதிஷ்டமான சமூக பின்புலத்தில் இருந்து வந்தவர்களாகும். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 5அல்லது 6ஆம் தரத்துக்கு பின்னர் பாடசாலை கல்வியில் இருந்து விலகியவர்களாகும்.

பெரும்பாலும் குற்றச்செயல்களின் அடிப்படையாக இருப்பது தனி நபரின் செயற்பாடுகள் அல்ல.மாறாக சமூக சமத்துவமின்மை, வறுமை மற்றும் பாகுபாடு காட்டுவதாகும். சிறைப்படுத்தப்படும் அனைத்து கைதிகளும் திறமையான ஒழுக்கமுள்ள மற்றும் மனிதாபிமானமுள்ள குடிமகனாக அதில் இருந்து வெளியேறிச் செல்லவேண்டும்.

மேலும் எமது தேசத்தின் இரண்டு கொடிய சக்திகளான போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. பல தசாப்தங்களாக, சிறைச்சாலை என்ற வார்த்தை சமூகத்தில் ஒரு பய உணர்வை உருவாக்கி வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

அந்த நிலை மாற்றப்பட வேண்டும், சிறைச்சாலைகள் புனர்வாழ்வு, ஒழுக்கம் மற்றும் தார்மீக அபிவிருத்தியை மேற்கொள்கின்ற மீட்பு நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும். அதனால் சிறைச்சாலை கட்டமைப்பை வெளிப்படைதன்மையாகவும் பொறுப்புக்கூறக்கூடிய கட்டமைப்பாகவும் மாற்றுவது எமது அரசாங்கத்தின் இலக்காகும்

சிறைச்சாலைகள் என்பது எதிர்பார்ப்புக்களை சிதைக்கும் சித்திரவதை கூடங்கள் அல்ல. மாறாக வாழ்க்கை தொடர்பில் எதிர்பார்ப்புகளை ஒளிரவிடும் வேலைத்தலமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்” என்றார்.

# 736 சந்தேக நபர்கள் கைது



நாடு முழுவதும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசேட பொலிஸ் நடவடிக்கையின் கீழ் 736 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குற்றங்களுடன் நேரடியாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ண-ிக்கை 16 ஆகும்.

பிடியாணையுடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 271 என்றும், திறந்த பிடியாணையுடன் கைது செய்யப்பட்டவர்களின் எண்ண-ிக்கை 194 என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விசேட பொலிஸ் நடவடிக்கையின் போது மதுபோதையில் வாகனம் செலுத்திய 21 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.





# காரைநகர் பெண் கொலை: பிரதான சந்தேகநபர் கைது!

பூநகரி – சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் காரைநகரைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப் புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

அவர் தவில் வித்துவான் என்றும், யாழ். குப்பிளான் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி சங்குப்பிட்டி கடற்பரப்பில் காரைநகரைச் சேர்ந்த பெண்ணொருவர் முகம் தீக்கி ரையாக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோத னையின்போது, தலையில் பலமாகத் தாக்கப்பட்டதாலும், நுரையீரலுக்குள் தண்ணீர் உட்புகுந்ததாலும் இறப்புச் சம்பவித்ததாகத் தெரியவந்தது.

உயிரிழந்த பெண்ணின் நண்பி ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேற்கொள்ளப் பட்ட மேலதிக விசாரணைகள் மற்றும் உயிரிழந்த பெண்ணின் தொலைபேசி அழைப்புகள் என்பவற்றை அடிப்படை யாக வைத்து மேலதிக நடவடிக்கை களைப் பொலிஸார் முன்னெடுத்தனர். இதன்போதே, மேற்படி நபர், பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

முதற்கட்ட விசாரணைகளின் அடிப் படையில் பொலிஸார் தெரிவித்ததா வது:-

“பெண்ணுக்கும் மேற்படி இளைஞ ருக்கும் இடையில் நீண்ட நாள் தொடர்பு இருந்து வந்துள்ளது. சம்பவம் இடம் பெற்ற அன்று இருவரும் மது அருந்தி யுள்ளனர். பின்னர், காரொன்றை வாட கைக்குப் பெற்றுக்கொண்டு சங்குப்பிட்டிப் பகுதியூடாகச் சென்றுள்ளனர்.

இதன்போது அந்தப் பெண் அதீத மதுபோதையால் வாந்தி எடுப்பதற் காக இறங்கிய வேளை போதையின் தடுமாற்றத்தால் கடலினுள் விழுந்துள் ளார். அதனை வீதியால் சென்ற டிப்பர் சாரதி அவதானித்துள்ளார். இதையடுத்து, காரில் இருந்த மேற்படி சந்தேகநபர் இறங்கிச் சென்று அவதானித்த போது, அந்தப் பெண் சுய நினைவின்றி இருந் ததால், அடையாளத்தை அழிப்பதற்காக முகத்தில் எரிபொருளை ஊற்றி எரித்து விட்டு நகைகளை எடுத்துக்கொண்டு உருத்திரபுரம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று தங்கியிருந்துள்ளார்.

இதையடுத்து, மீண்டும் உடுவி லுக்கு வந்த நிலையிலேயே, அவர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப் பட்டுள்ளார்.” – என்றனர்.

அவரிடம் இருந்து 11 பவுண் நகைக ளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய நகைகள் தனியார் நிதி நிறு வனமொன்றில் 17 இலட்சம் ரூபாவுக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபரை நீதிமன்றத் தில் முற்படுத்தி, 72 மணி நேரங்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்யப் பொலிஸார் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளனர்.








# சமத்துவக் கட்சியின் பேராளர் மாநாடு

சமத்துவக் கட்சியின் பேராளர் மாநாடு நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு கட்சியின் தலைவர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு – கிழக்கு உள்ளிட்ட பல மாவட்டங்களிலிருந்தும் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள் இப்பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். இதன் போது கட்சியின் யாப்பு திருத்தம், கட்சியின் நிதி நடவடிக்கைகள், கட்சியின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பது மற்றும் தேர்தல்களை எதிர்கொள்வது உள்ளிட்ட பல விடயங்கள் பேசப்பட்டன.

இப்பேராளர் மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார்,கட்சியின் நிர்வாக மட்டத்

தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.









# ‘விதைகள் உறங்குவதில்லை’ திட்டத்தின் கீழ் மணல்காடு கிராமத்தில் பனை விதை நடுகை!

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்தில் ‘விதைகள் உறங்குவதில்லை’ எனும் திட்டத்தின் கீழ் புளூஸ் அறக்கட்டளை மற்றும் புளூாஸ் விளையாட்டு கழகத்தினரின் நிதி அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 10:30 மணியளவில் பனம் விதை நடுகை திட்டம் ஆரம்பமானது.

இதில் பிரதம விருந்தினராக ஜன நாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், வடமராட்சி கிழக்கு சமூக ஆர்வலர்களான அகஸ்ரின், கலைச் செல்வன், வி.ஜே.நிதர்சன், ஆ.சுரேஸ் குமார், திருமதி சுரேஸ்குமார், திருமதி தவனேசன் ஜெனிதா, பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஜெ.ஜெயகோபி, மணல்காடு அருட்சகோதரி, மணல் காடு கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# ஏறாவூரில் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடி போதைப்பொருள் விற்று வந்த சிப்பாய் கைது

(கனகராசா சரவணன்)

மட்டு ஏறாவூரில் இராணுவத்தில் இருந்து விடுமுறையில் வீடு வந்து, மீண்டும் கடமைக்கு திரும்பாது இரண்டு வருடமாக தலைமறைவாகி, போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் ஒருவரை ஏறாவூரில் 5 கிராம் 410 மில்லிக் கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்றுப் புதன்கிழமை கைது செய்துள்ளமையுடன் இராணுவச் சீருடை ஒன்றை மீட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்றுக் காலை ஏறாவூர் கலைமகள் பாடசாலை வீதியில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மாறு வேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது ஐஸ் போதை பொருள் வியாபாரத்துக்கு எடுத்து கொண்டு சென்றவரை வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் சுற்றி வளைத்து மடக்கி பிடித்து கைது செய்தமையுடன் அவரிடமிருந்து 5 கிராம் 410 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டனர்.





இந்த நபர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்துள்ள நிலையில் விடுமுறையில் வீடு வந்து மீண்டும் கடமைக்கு திரும்பாது தலைமறைவாகி, போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பதும், ஏற்கனவே ஐஸ் போதைப்பொருள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்து நீதிமன்றில் ஆஜராக நிலையில் அவருக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், இராணுவச் சீருடையை இராணுவ முகாமில் வழங்காது வைத்திருந்தார் என்பதும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அவரின் வீட்டில் இருந்து இராணுவச் சீருடையைத் தாங்கள் மீட்டுள்ளனர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பன்மதவாச்சி விபத்தில் இளைஞர் காயம்







(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம் மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்மதவாச்சி – புளியங்குளம் பகுதிக்கிடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் மகதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் மாலை சுமார் 6.45 மணியளவில் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தில் காயமடைந்தவர் திருகோணமலை அபயபுர பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரியவருகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மெரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா மேயருக்கு எதிரான தடையை விலக்கச் செய்வதற்காக மேன்முறையீடு

## ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தகவல்




**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாநகர சபையினுடைய செயற்பாடுகளையும் மற்றும் மேயருடைய நடவடிக்கைகளையும் தடுக்காமல் இருக்கும் ஒழுங்கைச் செய்வதற்காக நாங்கள் ஒரு மேன்முறையீடு செய்வதை பற்றி ஆராய்கின்றோம் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாநகரசபைக்கு ஒரு தடை உத்தரவு வந்திருக்கிறது. சட்டம் என்ன சொல்கிறது என சட்டத்தை வாசித்தால் உங்களுக்கு தெரியும். ஓர் இடைக் கால கட்டளை ஒன்று கொடுக்கப்பட்டுளாது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் சபையின் முதல்வருடைய, பிரதி முதல்வருடைய நடவடிக்கைகளும் சபையுடைய நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

இது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

இதற்கு முன்னர் அந்த வழக்கில் நான் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் இந்த மேன்முறையீட்டில் அந்த வழக்கை என்னையும் நடத்துமாறு கேட்டிருக்கிறார்கள். நான் அதற்கு இணங்கி இருக்கிறேன்.

அந்த இடைக்காலத் தடையை நீக்குவதற்கான முயற்சி முதலிலே மேற்கொள்ளப்படும். பிரதி மேயருக்கு எதிராகத்தான் இந்த வழக்கு வைக்கப்பட்டது. ஆனால் பிரதி மேயருடைய நடவடிக்கையை தடுப்பதற்கான இடைக்கால தடை கட்டளைக்கும் அப்பால் சென்று மேயருடைய நடவடிக்கையையும் தடுத்து மாநகரசபையுடைய நடவடிக்கைகளையும் தடுத்து இடைக்கால கட்டளை கொடுக்கப்பட்ட காரணத்தினால் குறைந்தபட்சம் மாநகர சபையினுடைய நடவடிக்கைகளை தடுக்காமல் – மேயருடைய நடவடிக்கைகளை தடுக்காமல் – செய்வதற்காக நாங்கள் மேன்முறையீடு செய்வது குறித்து ஆராய்கிறோம். – எனத் தெரிவித்தார்.

# இம்முறை ‘பட்ஜட்’டில் வரிவிதிப்பு இருக்காது!

## அநுர அரசு அறிவிப்பு



“2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பு இடம்பெறாது. இயலுமான அனைத்துத் துறைகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“2026ஆம் நிதி ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நாளை 7ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இம்முறை பட்ஜட்டில் வரி விதிப்புகள் இருக்காது என்று ஜனாதிபதி அறிவித்துவிட்டார்.

அத்துடன், அரசால் முடியுமான அளவுக்கு மக்களுக்குச் சலுகை வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். அது எவ்வாறு இடம்பெறும் என்பது தொடர்பில் ஜனாதிபதி தமது உரையில் தெளிவுபடுத்துவார். உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.”– என்றார்.

# தி.மு.க மீது இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டது

## த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு



தி.மு.க. அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்து விட்டதாக த.வெ.க. தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் நேற்று கூடியது. இதில், கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார். இதைத் தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசலில் சிக்கிய உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் உட்பட 12 தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழுவின் இறுதியாக விஜய் தலைமையுரை ஆற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நமது குடும்ப உறவுகளை இழந்ததால் சொல்ல முடியாத வேதனையுடனும், வலி யுடனும் இத்தனை நாள்களாக நாம் இருந் தோம். அந்தச் சூழலில் அவர்களுடன் சேர்ந்து அமைதி காத்து வந்தோம்.

அமைதி காத்து வந்த நேரத்தில் நம்மைப் பற்றி வன்ம அரசியல் வலை கள், அர்த்தமற்ற அவதூறுகள் பிண்ணப் பட்டன, பரப்பப்பட்டன. இவை அனைத் தையும் சட்டம் மற்றும் சத்தியத்தின் துணைக் கொண்டு நாம் துடைத்தெறி யத்தான் போகிறோம்.

அதற்கு முன்பாக தமிழக சட்டமன்றத் தில் நமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஓர் உரைக்கு ஒரு நாகரிக பதிலடி கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அரசியல் செய்ய விருப்பமில்லை, அரசி யல் செய்ய விருப்பமில்லை என அடிக் கடிச் சொல்லும் முதல்வர், பெருந்தன் மையை பெயரளவில் மட்டுமே பேசும் முதல்வர், 15.10.2025 அன்று தமிழக சட்டப்பேரவையில் நமக்கு எதிராகப் பேசிய பேச்சில் எவ்வளவு வன்மத்தைக் கக்கியுள்ளார் என்பதையும் எப்படிப்பட் ஒரு அரசியலைச் செய்ய முயல்கிறார் என்பதையும் தமிழக மக்கள் உணரா மலா இருப்பார்கள்?

கரூரோடு சேர்ந்து 5, 6 மாவட்டங்க ளில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நாம் நடத்தி இருக்கிறோம். அங்கே எல்லாம் கடைசி நிமிடம் வரை அந்த இடத்தைக் கொடுப்பார்களா மாட்டார்களா என்றே தெரியாது. நான் நாகையில் சொன்னது போலத்தான், மக்கள் நெருக்கடி இல்லா மல் இருப்பதற்கு ஏற்ப நாங்கள் ஓர் இடத்தை தேர்வு செய்து கேட்போம். ஆனால், மக்கள் நெருக்கடியோடு நிற் பதற்கு ஏற்ற ஓரிடத்தை தேர்வு செய்து கொடுப்பார்கள். எல்லா இடத்திலும் இப்படித்தான் நடக்கும்.

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த ஒரு அரசியல் தலைவருக்கும் இல்லாத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பஸ்ஸ/க்குள்ளேயே இருக்க வேண்டும், மேலே வந்து கை காட்டக்கூடாது. இப்படி அதீத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போது இது தொடர்பாக நாங்கள் ஒரு அறிக் கையை வெளியிட்டோம். அனைத்து கட்சிகளுக்கும் சமமான முறையான ஒரு பொதுவழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என சென்னை உயர் நீதி மன்றத்தையும் நாடினோம். இதையும் தமிழக மக்கள் உணராமலா இருப் பார்கள்?

கரூர் சம்பவத்துக்குப் பிறகு அவசர அவசமாக ஒரு தனி நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த தனி நபர் ஆணையத்தையும் அவமதிக்கும் வகை யில் அரசு உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் நம்மைப் பற்றி அவதூறு பரப்பி ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத் தினார்கள். அவசர அவசரமாக இவை எல்லாம் ஏன் நடக்கிறது? எதற்காக நடக்கிறது? என ஒட்டுமொத்த தமிழக மக்களும் கேள்வி கேட்க தொடங்கி னார்கள். இதையும் தமிழக முதல்வர் மறந்துவிட்டாரா? அதன்பிறகு, அந்த தனி நபர் ஆணையத்தையே தலையில் கொட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அது வேறு விஷயம்.

இப்படி எல்லாம் கேள்வி கேட்ட உட னேயே, அவற்றுக்கு பதில் சொல்ல வேண்டுமல்லவா? சட்டமன்றத்தில் பேசும்போது உண்மை நிலையை தெளிவுபடுத்த ஏதோ சட்ட ரீதியாகவும் சத்தியத்தின் படியும் பேசுவதாக நினைத் துக்கொண்டு முதல்வர் ஏதேதோ பேசி னார். 50 வருடமாக பொது வாழ்க்கை யில் உள்ள ஒருவர், ஒரு முதல்வர் எவ்வளவு பெரிய வடிகட்டிய பொய்யைப் பேசியுள்ளார் என்பதை நான் சொல்ல வில்லை, உச்ச நீதிமன்றமே சொல்லி உள்ளது.” என்று தெரிவித்தார்.

# கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தன்று பணியில் ஈடுபட்ட பொலிஸாரிடம் சி.பி.ஐ. விசாரணை



கரூரில் விஜய் பங்கேற்ற த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரி ழந்த சம்பவத்தன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 10 இற்கும் மேற் பட்ட பொலிஸாரிடம் சி.பி.ஐ. அதி காரிகள் நேற்று முன்தினம் விசாரணை மேற்கொண்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உச்ச நீதிமன்ற உதரவுப்படி, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கி யுள்ள சி.பி.ஐ. அதிகாரிகள், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகுமாறு பல்வேறு துறை அரசு அலுவலர்கள், சம்பவம் நடந்த பகுதி யில் கடை வைத்துள்ள வியாபாரிகள், நேரடி சாட்சிகள் என 300 இற்கும் மேற்பட்டோருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி 10 இற்கும் மேற்பட்ட வியாபாரிகளிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து, விஜய் பிரச்சாரம் மேற்கொண்ட வாகனத்தில் உள்ள கேமரா பதிவு காட்சிகளை அளிக்குமாறு, சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் அழைப்பாணை அளித் தனர்.

இந்நிலையில், சம்பவம் நடந்த செப்ரெப்பர் 27ஆம் திகதியன்று பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கரூர் நகர பொலிஸார் மற்றும் ஏனைய பொலிஸ் நிலைய பொலிஸார் என 10 இற்கும் மேற்பட்டோரிடம் சி.பி.ஐ. அதி காரிகள் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து பல்வேறு தரப் பினரிடம் விசாரனை நடத்தப்படும் என்று சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.



# அமெரிக்காவில் விமானம் வெடித்து சிதறியதில் பலியானோர் எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு

அமெரிக்காவின் கென்டகி மாநிலத்தில் உள்ள லூயிவில் சர்வதேச விமான நிலையத்தில், விமானமொன்று விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவாய் நோக்கிப் புறப்பட்ட சரக்கு விமானமொன்றே நேற்று விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புறப்பட்ட சில நிமிடங்களில் மேற்படி விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளான நிலையில் அதிலிருந்த சுமார் 38 ஆயிரம் கலன்களிலுள்ள எரிபொருள் வெடித்துச் சிதறியதால், விமானம் முழுவதுமாகத் தீப்பற்றி எரிந்தது.

இதனால் ஏற்பட்ட தீ அருகிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கும் பரவியதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இதுவரை 7 பேர் உயிரிழந்தனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் தொடர்வதால், அதிகாரிகள் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 11 பேர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், விபத்தின் போது விமானத்தில் மூன்று விமான பணியாளர்கள் இருந்தனர் எனவும் அவர்கள் அனைவரும் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து நடந்த பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக உடனடியாகப் தங்குமிடங்களை நாடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து அமெரிக்க ஃபெடரல் விமானப் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் தேசிய போக்குவரத்துப் பாதுகாப்புக் கழகம் ஆகியவை விசாரணையைத் தொடங்கியுள்என.



# போதைப்பொருள் ஏற்றிச் சென்ற படகு மீது அமெரிக்க ஆளில்லா விமானம் தாக்குதல்

பசுபிக் கடல் வழியாக சட்ட விரோதமாக போதைப்பொருள் கடத்தி சென்ற படகு மீது அமெரிக்கா நேற்று ஆளில்லா விமான தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 67 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பசுபிக் கடல் வழியாக சர்வதேச கடல் பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த படகு மீது இந்த ஆளில்லா விமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெனிசுலா, மெக்சிகோ உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார்.

மேலும், கடல் வழியாக போதைப் பொருள் கடத்தி வரும் கும்பல் மீது தாக்குதல் நடத்தவும் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.11.2025

## மேஷம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக் காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணி யிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

## ரிஷபம்

இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படு கின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர் கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். மன வருத்தங்கள் ஏதும் இல்லாமல் இன்று திருப்தியான உணர்வுடன் இருப்பீர்கள்.

## மிதுனம்

உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவு களை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப் தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

## கடகம்

இன்று ஆன்மீக செயல்களில் ஈடு படுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாக வும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திற னுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## சிம்மம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைப் பது அரிது. உங்கள் மனதை அமைதி யாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீ காரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்கு வீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்க ளுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப் பதும் கடினமாக உணர்வீர்கள்.

## கன்னி

இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வ தன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக் கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர் கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

## துலாம்

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசி யம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்பஉங்களைமாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை நேர்மை யாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதி யாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்த கைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.11.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடின மாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.



# வனவளத் திணைக்களத்தின் குறிப்பிட்ட ஓர் அதிகாரியை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு அனுப்பாதீர்!

## மன்னார் மாவட்டச் செயலாளர் கடிதம் மூலம் அறிவுறுத்தல்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு குறித்த ஓர் அதிகாரியை அனுப்பி வைக்கக் கூடாது என வனவளத் திணைக்களத்திற்க. மன்னார் மாவட்டச் செயலாளர் கடிதம் மூலம் அறிவுறுத்தல் அனுப்பி வைத்துள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தினத்தில் வனவளத் திணைக்களத்தின் மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் விடுமுறை என்பதனால் பதில் கடமை உத்தியோகத்தர் ஒருவர் பங்கு கொண்டுள்ளார்.

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குகொண்ட உத்தியோகத்தர் சில நிர்வாக விதிமுறையை மீறி முசலிப் பிரதேச செயலாளருக்கு எதிராக அண்மையில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் எனவும், மடு வீதிப் புனரமைப்பின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களை கைத்துப்பாக்கி காட்டி அச்சுறுத்தியவர் என்பதனால் சபையில் இருந்து அவரை வெளியேற்ற வேண்டும் என கடுமையான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இதனையடுத்து இன்று வந்த ஓர் அரச அதிகாரியை இடைநடுவில் வெளியேற்றுகின்றமையைத் தவிர்த்து, இனி வரும் நாள்களில் இந்த உத்தியோகத்தரை அனுப்ப வேண்டாம் என உரிய திணைக்களத்திற்கு கடிதம் அனுப்புவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளரான மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கமையவே சர்ச்சைக்குரிய உத்தியோகத்தரை இனி வரும் நாள்களில் இடம்பெறும் எந்தவொரு ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திற்கும்அனுப்பவேண்டாம் என்ற கடிதம் மன்னார் மாவட்டச் செயலாளரால் வனவளத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.